viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 080 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 25 புதன்கிழமை (09.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## தமிழர், முஸ்லிம்களுடன் இணைந்து செயற்படுக

அமெரிக்கா வலியுறுத்து



07ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடாதீர்



ஐ. நாவில் சீனா

07ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத தடைச் சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானது

உயர் நீதிமன்றம்

03ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நாவில் 31 நாடுகள் இலங்கைக்கு ஆதரவு



ஜி.எல். பீரிஸ்

05ஆம் பக்கம் பார்க்க

# அரசியல் தீர்வு அவசியம் தேவை

## அமெரிக்க தூதுவரிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு



(கொழும்பு)

அனைத்து தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்று அவசியம் தேவை என புதிய அமெரிக்க தூதுவரிடம் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான

## செல்லுபடிக் காலம் 6 மாதங்களால் நீடிக்கப்பட்டது

(கொழும்பு)

ஏப்ரல் முதலாம் திகதி முதல் 2022 ஜூன் 30 ஆம்திகதிவரையான காலப் பகுதிக்குள் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செலுபடியாகும் காலம் மேலும் 6 மாதங்களால் நீடிக்கப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

15

காதலிக்க மறுப்பு

## மாணவி கோடாரியால் அடித்துப் படுகொலை



மகளிர் தினமன்று பயங்கரம்

(பதுளை)

சர்வதேச மகளிர் தினமான நேற்று மாலை பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய மாணவியொருவர் கூரிய கோடரியால் அடித்துக்

15

## பொருளாதார நெருக்கடியை சமாளிக்க அனைத்தும் தயார்

### அச்சம் வேண்டாம் - அமைச்சர் பசில்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்து பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை சமாளிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிதி அமைச்சர் பசில் தெரிவித்துள்

15

கரவெட்டி கலட்டிப் பகுதியில்

## விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்



(கரணவாய்)

கரவெட்டி கலட்டிப் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்தார்.

15

## முல்லையில் கிணற்றில் வீழ்ந்த மாணவி உயிரிழப்பு



கொய்யாப்பழம் பறிக்க மரத்தில் ஏறியபோது விபரீதம்

(முல்லைத்தீவு)

கொய்யாப்பழம் பறிக்க மரத்தில் ஏறிய 14 வயது மாணவி தவறிக் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

15

## சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் ஜனாதிபதி கோட்டா சந்திப்பு

### சர்வகட்சி மாநாட்டை நடத்த இணக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான பொதுஜன முன்னணியினருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று ஜனா

15

## வீட்டில் நிம்மதியாக வாழ முடியவில்லை

அச்சுவேலி பொலிஸில் தஞ்சம் அடைந்த 12 வயது மாணவி

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தன்னால் நிம்மதியாக வாழ முடியவில்லை எனக் கூறி

15

## நாட்டில் இன்றும் மின்துண்டிப்பு

(கொழும்பு)

நாட்டில் இன்றும் மின் துண்டிப்பை மேற்கொள்வது தொடர்பில் மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு பொதுப்பயன்

15

யாழ். கொழும்புத்துறையில்

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

கல் அரிந்தபோது சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் நேற்று மதியம் மின்சாரம் தாக்கி

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்து ரொட்டிக்கு காப்புரிமை

## சபையில் கோரிக்கை

கொத்து ரொட்டிக்கான காப்புரிமையை இலங்கை பெற வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் நேற்று பாராளுமன்றத்தில் முன்மொழிந்தார்.

இத்தாலியின் பீட்சா (pizza), அமெரிக்காவின் பர்கர் (burger) போன்று கொத்து ரொட்டிக்கு இலங்கை காப்புரிமை பெற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொத்து ரொட்டி மட்டக்களப்பிலிருந்து நாடெங்கும் பரவி இலங்கையர்களின் விருப்பத்துக்குரிய முக்கிய உணவாக மாறியதாக தெரியவருகிறது. தற்போது ஐஸ்கிறீம் கொத்து உட்பட பல வகைகள் இருப்பதாக சரித ஹேரத் கூறினார்.

இலங்கையின் பூர்வீக உணவுகளுக்கான காப்புரிமையை பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென தெரிவித்த அவர், அபிவிருத்தியடைந்த நாடுகளுடனான வர்த்தகத்தை வலுப்படுத்துவதற்கான வழிமுறையாக இதனைப் பயன்படுத்தலாம் எனவும் ஹேரத் சுட்டிக்காட்டினார். (ம)


**கார்கள்/ வான்கள் குத்தகைக்கு தேவை**

கார்கள், வான்கள் சாரதி இல்லாமல் மாதாந்த நீண்ட கால குத்தகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:-

**075 090 6486**

(10550)



**கிழவன்காடு கலாமன்றம்**

நடாத்தும்

**கலந்துரையாடல்**

கிழவன்காடு கலாமன்றம் கலையை வளர்ப்பது மற்றும் பாதுகாப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை மிக விரைவில் நடாத்தவுள்ளதால் அதில் கலந்துகொண்டு ஆலோசனை மற்றும் ஆதரவினை வழங்க விருப்பமுள்ள கலாரசிகர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிகளுக்கு நேரிலோ அல்லது தபாலிலோ சமர்ப்பிக்க முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.

பதிவாளர்
கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர்

பதிவாளர்
கிழவன்காடு கலாமன்றம்
யாழ்.கிளை
இல.428, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
077 578 6638

(C-3923)



**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப் பொங்கல் - 2022**

**வர்த்தக நிலையங்களை ஏலத்தில் வழங்கல்**

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 18.03.2022ஆம் திகதி நடைபெறவுள்ளது.

உற்சவகால வியாபார நடவடிக்கைகளுக்காக கடைகள் ஏலம் விடுதல் எதிர்வரும் 13.03.2022ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும்.

வியாபாரம் மேற்கொள்ள விரும்பும் வர்த்தகர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை
நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை.

(C-3921)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலை பிரதி அதிபர்

திருமதி **ருஷானா வர்ஜீலியா பாலமுரளி**

**(B.A.,PGDE, M.Ed)** அவர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 04.03.2022இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை**
**யாழ்ப்பாணம்.**

(10545)



**சிவமயம்**

**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்**

**பங்குனி உத்தரப் பொங்கல்**

**18.03.2022**

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 11.03.2022ஆம் திகதி விளக்கு வைக்கும் வைபவத்துடன் ஆரம்பமாகி 18.03.2022ஆம் திகதி பொங்கல் உற்சவம் பகல், இரவாக சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

- 11.03.2022 விளக்கு வைக்கும் நாளிலிருந்து அடியார்கள் நேர்த்திகளை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- விசேட போக்குவரத்து சேவைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பண்டம் வழமைபோன்று மீசாலை புத்தூர் சந்தி பண்டமரவடிவரை சென்று வருவதுடன் வழமையான விடயங்கள் அனைத்தும் அங்கு இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- ஆலய கொடிகளுடன் உழவு இயந்திரத்தில் வருபவர்களுக்கு மட்டும் தண்டல் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வேறு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.
- ஆலயத்திற்கு வருபவர்கள் தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்க்கவும்.
- அனைத்து அடியார்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை
நாகதம்பிரான் ஆலயம்,
புளியம்பொக்கணை.

(C-3922)



**யாழ். கலாலயா பயிற்சியகம்**

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!
மற்றும் ஆர்வம் உள்ள மகளிரே!

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகளும் பயிற்று விக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

(C-3917)

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவியருக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**16.03.2022 புதன் காலை 10.00 மணி**
**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**20.03.2022 ஞாயிறு காலை 10.00மணி**

மேலதிக விபரங்களை
காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை

-இயக்குநர்-

Guru


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்ட மூலம் அரசியலமைப்பிற்கு முரணானது

## உயர் நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

**பயங்கரவாத தடைச் (தற்காலிக ஏற்பாடு) சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அரசாங்கம் தற்காலிக ஏற்பாடான பயங்கரவாத தடை சட்டத்தின் திருத்த சட்ட மூலத்தை அண்மையில் முன்வைத்திருந்தது.

இதற்கு எதிராக பல்வேறு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களின் விசாரணை அடிப்படையில் உயர் நீதிமன்றம் தமது வியாக்கியானத்தை சபாநாயகருக்கு அனுப்பி இருந்தது.

இதனை நேற்று சபையில் வாசித்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன இந்த சட்ட மூலத்தின் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு விரோதமானது என உயர் நீதிமன்றம் வியாக்கியானம் அளித்திருப்பதாக தெரிவித்தார்.

எனவே அவற்றை நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம் எனவும் குறிப்பிட்டார். (நி)

# 2 நாட்களில் டீசலுக்கான தட்டுப்பாடு நீங்கும்

### எரிசக்தி அமைச்சு

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் டீசலுக்கான தட்டுப்பாடு நீங்கும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

2 கப்பல்களிலிருந்து டீசலை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர். வொல்கா குறிப்பிட்டுள்ளார்.

2 கப்பல்களிலிருந்தும் 45,000 தொன் டீசல் இறக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் 20,000 தொன் டீசலை இறக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலுமொரு கப்பல் நாட்டிற்கு வருகை தந்துள்ளதுடன், அதற்கான கட்டணத்தை செலுத்தியதன் பின்னர் நாட்டில் காணப்படும் டீசல் நெருக்கடியை குறைத்துக்கொள்ள முடியும் என எரிசக்தி அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர். வொல்கா தெரிவித்தார். (நி)

# இம்மாத இறுதிக்குள் பசில் இந்தியா விஜயம்

(கொழும்பு)

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மார்ச் மாதத்தின் இரண்டாம் பாதியில் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையில் நேற்று முன்தினம் தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன் பின்னரே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்த தொலைபேசி கலந்துரையாடலின் போது, இலங்கைக்கு அனைத்து வழிகளிலும் இந்தியா தனது ஆதரவை தொடர்ந்து வழங்கும் என்றும் எஸ்.ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளார். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



யா/கோப்பாய் கந்தவேள் வித்தியாலய
அதிபர் திருமதி **உ. ரவிகரன்**
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர்**
**பூ. கந்தையா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்வதோடு
அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கோட்டக்கல்விப் பணிப்பாளரும்**
**அதிபர்கள் சங்கமும்**
**கோப்பாய் கல்விக் கோட்டம்**

(10546)





மன்/வெள்ளாங்குளம் அ.த.க பாடசாலையில் க.பொ.த சா/த மாணவர்களிற்கு பாரி அறக்கட்டளை அமைப்பினரால் கற்றல் கையேடுகள் அண்மையில் வழங்கப்பட்டன.

## ஹிருணிகாவின் வீட்டின் மீது எதிரணியினர் மலக்கழிவு வீச்சு

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவின் வீட்டின் மீது மலக்கழிவு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவர் இதனைக் கூறியுள்ளார். இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

"ஹிருணிகா இரும்பு பெண். அவர் குண்டர்களுக்கு அஞ்சமாட்டார். அவர் மிக அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றை அரச தலைவர் இல்லத்திற்கு எதிரில் நடத்தினார். இதன் எதிரொலியாக ஹிருணிகாவின் வீட்டின் மீது மலக்கழிவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனால், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிடம் தற்போது மலக்கழிவு துர்நாற்றம் வீசுகிறது" என சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (ம)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்./மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி
ஓய்வுபெற்ற முன்னாள் ஆங்கில ஆசிரியர்
**அமரர்**
**க.வி. குருநாதன்**
**பிறப்பு : 04.10.1942 இறப்பு : 07.03.2022**

நேற்றுவரை எம்முடன் வாழ்ந்தவரே...!
நீங்கா நினைவுகள் தந்து
நீண்ட துயில் கொண்டதேனோ!
கண்ணிமைக்கும் நொடியிலே
காலன் உம்மை கவர்ந்து விட்டான்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-3919)

**சிவகுரு ஆதீனம், யாழ்ப்பாணம்.**

# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பி **ச. தாரணி** அவர்களின்
அன்புத் தாயார்
அமரர் **பழனிவேல் பரம்சோதி**
**மலர்வு : 5.09.1948 உதிர்வு : 5.03.2022**

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-3920)

**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி**
**ஆசிரியர்களும் ஆருயிர் நண்பிகளும்**

## சாதனையை முறியடித்த அஸ்வினுக்கு
# கபில்தேவ் பாராட்டு



இந்தியா, இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் போட்டியில் அஸ்வின் 6 விக்கெட்டுகள் கைப்பற்றினார். இதன் மூலம் டெஸ்ட் போட்டியில் கபில்தேவின் 434 விக்கெட் என்ற சாதனையை முறியடித்தார்.

அவருக்கு அனைத்து தரப்பினரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். அஸ்வின் 85 போட்டிகளில் 436 விக்கெட்டை கைப்பற்றியுள்ளார்.

இந்நிலையில், தனது சாதனையை முறியடித்த அஸ்வினுக்கு கபில்தேவ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

இந்திய அணியில் அண்மைக் காலமாக அஸ்வினுக்கு சரியான முறையில் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. இருப்பினும் அவர் மிகப் பெரிய சாதனை படைத்துள்ளார்.

அவருக்கு தொடர்ந்து அணியில் இடம் கொடுத்திருந்தால் எப்போதோ 434 விக்கெட் என்ற இலக்கைக் கடந்திருப்பார்.

அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் பல ஆண்டுகளாக என்னிடம் இருந்த 2 ஆவது இடத்தை அஸ்வின் பிடித்தது மகிழ்ச்சியாக உள்ளது.

அஸ்வின் வியக்கத்தக்க வீரர். சிறந்த புத்தசாலித்தனமான பந்து வீச்சாளர். அடுத்து அவர் 500 விக்கெட் என்ற இலக்கை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

இதனை அடைய முயற்சி செய்து கட்டாயம் சாதிப்பார் என உறுதியாக நம்புகிறேன். ஒருவேளை அதையும் தாண்டி அஸ்வின் அசத்தலாம் என குறிப்பிட்டுள்ளார். (4-6)



## தீபக் சஹாருக்கு பதில்
# ஜோஸ் லிட்டில்

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் புதிய பந்து வீச்சாளர் சேர்க்கப்பட்டுள்ளார்.

அயர்லாந்தை சேர்ந்த ஜோஸ் லிட்டில் என்ற 22 வயது வேகப்பந்து வீச்சாளர், இந்த சீசன் முழுவதும் சிஎஸ்கேவுக்கு வலைப் பயிற்சி பவுலராக செயற்படவுள்ளார். அணியின் முன்னணி பவுலரான தீபக் சஹாருக்கு காலில் தசை நார் கிழிவு ஏற்பட்டுள்ளது.




இதனால் ஐபிஎல்-ன் முதல் பாதி தொடரில் இருக்க மாட்டார். எனவே அவரின் இடத்திற்கு ஜோஸ் லிட்டிலை இணைத்துள்ளனர். (4-6)



யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்துக்கும் ஞானகலா விளையாட்டுக் கழகத்திற்கும் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் 7-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (படம்:- ஏஜெண்ஸ்ட்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருக்கலைப்பு தொடர்பான சட்டம்; ஆராய தயார் என்கிறார் நீதி அமைச்சர்



(கொழும்பு)

கருக்கலைப்பு தொடர்பாக அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி பிரேரணை சமர்ப்பித்தால், அது தொடர்பாக ஆராய்ந்து சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளத் தயார் என நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஆளும் தரப்பு உறுப்பினர் சாந்த பண்டார கேள்வி ஒன்றை முன் வைத்தார்.

பலாத்காரமாக துஷ்பிரயோகத்துக்கு ஆளாகும் பெண்ணின் கருவறையில் உருவாகும் கருவை இல்லா மலாக்குவது தொடர்பாக சட்ட ரீதியில் பிரச்சினை இருந்து வருகின்றது.

இது மிகவும் கவலைக் குரிய பிரச்சினை என்றும் இந்நிலைக்கு ஆளாகும் பெண், பல்வேறு அசௌகரியங்கள் மற்றும் சமூகத்தில் தாழ்த்தப்படும் நிலை உருவாகிறது.

மேலும் பிறக்கும் குழந்தையும் காலம்பூராக சமூகத்தில் இழிவுபடுத்தல்களுக்கு ஆளாக நேரிடுகிறது என சாந்த பண்டார தெரி வித்த நிலையில் இதற்கு பதில் வழங்கும் போதே நீதி அமைச்சர் அலிசப்ரி மேற் கண்ட வாறு தெரிவித்தார். (நி)

# 31 நாடுகள் இலங்கைக்கு ஆதரவு

## வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

நல்லிணக்கத்திற்கான அரசாங்கத்தின் கணிசமான முயற்சிகளுக்கு உலகில் பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவை வெளிப்படுத்தியதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை குறித்து உரையாற்றிய 45 நாடுகளில் 31 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகப் பேசியுள்ளதாக தெரிவித்தார்.

தெற்கு, தென்கிழக்கு , மத்திய ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடுகள் பல இலங்கைக்கு ஆதரவு வழங்கியது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை கடுமையான முரண்பாடுகள் மற்றும் பல வீனங்களைக் காட்டுவதாக ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (நி)


## விண்ணவரோடு மகிழ்ந்து 6 மாதம்



அன்னை மடியில் 09 . 08 . 1951

ஆண்டவன் அடியில் 09 . 09 . 2021

அமரர். திருமதி.டெய்சி பற்றிமா மனோகரன் B.com (J.P)

( ஓய்வுநிலை ஆசிரியர் Wesley college colombo-09)

(Old girls Holy Family Convent Jaffna)

"நான் இருக்கும் இடத்திலே அவர்களும் என்னோடு இருக்க விரும்புகின்றேன்" (அரு.17:24)

(10547)

தகவல்: குடும்பத்தினர்,
"Daisy Kudil"
104/18 A, Sangamita MW,
KOTAHENA, COLOMBO-13.

133, MATHAVADY
ERALALAI, NORTH,
ERALALAI,
JAFFNA.


## பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர ராஜினாமா

(கொழும்பு)

துறைமுகம் மற்றும் கப்பற்றுறை இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர அறிவித்துள்ளார்.

தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரான அவர் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (நி)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர். பூ.கந்தையா



யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க.பாடசாலை அதிபர் திருமதி. உமாவதி ரவீகரன் அவர்களின் அன்புத் தந்தையார் அமரர். பூ.கந்தையா அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-3914)

பாடசாலைச் சமூகம்,
யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க.பாடசாலை.


# இராசிபலன்

09.03.2022
மாசி 25 , புதன்கிழமை
சப்தமி பின்னிரவு 4.11-மணிவரை.

கார்த்திகை முற்பகல் 9.59 மணிவரை
சுபநேரம் - 4.54.-6.24 மணிவரை
இராகுகாலம் -12.24-1.54 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம்-சுவாதி

வளவன்


மேஷம்
காலைப்பொழுதே கலகலப்பான தகவல் கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


ரிஷபம்
விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.


மிதுனம்
அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள்.


கடகம்
பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்,


சிம்மம்
குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படவீர்கள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


கன்னி
சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


துலாம்
சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது. ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம்,திருடர் பயமுண்டு.


விருச்சிகம்
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


தனுசு
கடன் சுமை குறைய நடவடிக்கை எடுப்பீர்கள், உடல் நலம் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும்.


மகரம்
ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


கும்பம்
நீங்கள் தேடிச்சென்ற நபர் உங்களைத் தேடி வரலாம், பெற்றோர் மீதான பிரியம் கூடும், சுபதகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


மீனம்
பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், செய்தொழிலில் எதிர்பார்த்த திருப்பங்களைக் காணலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

நன்மை செய்வதால் நட்டம் இல்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சர்வதேச மகளீர் தினத்தை புறக்கணித்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர். இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் காணமல் போன தமது உறவுகளின் புகைப்படங்கள் மற்றும் பதாதைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பி எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். (படங்கள் : சப்தசங்கரி, தவசீலன், யதுபாஸ்கரன், தேவானந்தன், சதீஸ்)

# பெண்கள், சிறுவர்கள் துஷ்பிரயோகங்களை இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்

## யாழ்.அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகம் வருடாந்தம் அதிகரித்து செல்கின்றது எனவே அதனை கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித் தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய நிலையில் ஒவ்வொரு வருடமும் பெண்கள், சிறுவர் துஸ்பிரயோகம் அதிகரித்துச் செல்கின்ற நிலை காணப்படுகின்றது.



ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்து துஷ்பிரயோகத்தை தடுக்க கூடிய நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டும்.

தற்போதைய சமூகம் எதிர்நோக்குகின்ற பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தினை ஒழிப்பதற்கு உலகளாவிய ரீதியிலே தக்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு என தனியான ஒரு அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது அதே போல மாகாண, மாவட்ட மட்டங்களில் திணைக்களங்கள் செயற்படுகின்றன.

அனைவரும் ஒன்றிணைந்து இந்த பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகங்களை இல்லாதொழிப்பதற்கு நாம் இன்றைய மகளிர் தின நிகழ்வில் தயாராகவேண்டும்.

சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-6-104)




குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் நாத இசை வேள்வி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆச்சிரமத்தின் சைவபூசணம் காசிப்பிள்ளை நல்லையா அரங்கில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் மூத்த எழுத்தாளர் ஐ.சண்முகலிங்கம் இலக்கிய ஞான ஜோதி எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (படம் : ரவிசாந்)

# கஞ்சாவுடன் கைதானவருக்கு 15 ஆயிரம் அபராதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-மீசாலை பழைய ஸ்ரேசன் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கஞ்சாவுடன் கைதான நபருக்கு நீதிமன்றால் 15 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி மது வரித் திணைக்களத்தினரால் 16 கிராம் கஞ்சாவுடன் கைதான நபர் ஒருவருக்கே நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு நபர் தப்பியோடியுள்ள நிலையில் அவருக்கு எதிராக பிடியாணை விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையினை தேசிய பாடசாலையாக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மகளிர் தினமன்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேசிய பாடசாலைக்கான பெயர் பலகையை திறந்து வைத்தார். (படம் : மகாலிங்கம்

## அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

குப்பிழான் கேணியடி ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

அலங்கார உற்சவத்தின் பத்தாம் நாளான எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அபிஷேகம், பூசை, வசந்தமண்டபப் பூசை, திரு ஊஞ்சல், வைரவர் வீதி வலம் வருதல், மகேஸ்வர பூசை(அன்னதானம்) என்பன இடம்பெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை 108 சங்காபிஷேகம், அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை நடைபெறும். (4-6-18)



"நாடும் தேசமும் உலகமும் அவளே" எனும் தொனிப்பொருளில் யாழ். மாவட்ட செயலகத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனின் வழிகாட்டுதலின் கீழ் இடம்பெற்றது. சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சிறு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனை கண்காட்சியும் மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது. (படம் : கஜிந்தன், ரவிசாந்)

## பொன் அணிகளின் சமர்

(யாழ்ப்பாணம்)

SL Mobitel அனுசரணையில் சென் பற்றிக்ஸ் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி இடையிலான வருடாந்த 105 ஆவது பொன் அணிகள் போர் (Battle of the Gold) நாளை மறுதினம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது என சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு ஏ.பி.திருமகன் அறிவித்துள்ளார். (4)

# புகையிலைச் செடி அறுவடை ஆரம்பம்

## விளைச்சல் மந்தம்

(ஈச்சமோட்டை)

யாழ்.மாவட்டத்தில் புகையிலைச் செடிகளின் அறுவடை தற்போது ஆரம்பித்துள்ளது.

இரசாயன உரம் இன்மை மற்றும் நோய்த் தாக்கங்களின் காரணமாக தீவகம், வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் விளைச்சல் குறைவடைந்துள்ளது.

அதே வேளை தற்போது ஒரு புகையிலைச்செடி 150 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. (4-6-105)

## ஆதனவரியை செலுத்தவும்

(யாழ்ப்பாணம்)

2022 ஆம் ஆண்டுக்குரிய ஆதனவரியை உடனடியாகச் செலுத்துவதன் மூலம் 5% வரிக்கழிவினை பெற்றுக்கொள்வதுடன் கடந்த ஆண்டுகளுக்கான நிலுவையையும் செலுத்தி மாநகரசபையின் அபிவிருத்தப் பணிகளை தடையின்றி மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பினை வழங்கியுதவுமாறு யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

இதுவரையில் ஆதனவரி அறிவித்தல்களை பெற்றுக் கொள்ளாதவர்களும், தங்களது ஆதனத்திற்கான வட்டார இல, வீதிப்பெயர், ஆதன இலக்கம் எனபவற்றுக்கான தகவல்களை வழங்கி ஆதனவரியைச் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவதற்கான ஆயுதமாக

# மனித உரிமைகளைப் பயன்படுத்த வேண்டாம்

## நட்பு நாடான சீனா வலியுறுத்து

(ஜெனிவா)

**இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையீடு செய்வதற்கான ஓர் ஆயுதமாக மனித உரிமைகளைப் பயன்படுத்துவதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று சீனா பேரவையில் வலியுறுத்தியுள்ளது.**

இது குறித்து சீனாவின் பிரதிநிதி தெரிவிக்கையில்,

இலங்கை குறித்து மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

அதேவேளை எமது நட்புறவு நாடு என்ற ரீதியில் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிசெய்தல், மேம்படுத்தல் ஆகியவற்றை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வரவேற்கின்றோம். அதேபோன்று நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட செயற்பாடுகளும் பாராட்டத்தக்கவையாகும்.

எனினும் இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானமானது, பக்கச்சார்பற்ற தன்மை, அரசியல் ரீதியான பாகுபாடற்ற தன்மை, தேர்வுசெய்து இயங்காத தன்மை உள்ளிட்ட பேரவையின் ஸ்தாபகக்கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானதாகக் காணப்படுகின்றது.

இலங்கையின் அரசியல் உறுதிப்பாடு, இறையாண்மை ஆகியவற்றுக்கு பேரவை மதிப்பளிக்கவேண்டியது அவசியமாகும். அதேபோன்று அந்நாட்டின் தேசிய ரீதியான வரையறைகளுக்கு அமைவாக மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதிசெய்வதற்கான பொறிமுறையை முன்னெடுப்பதற்கு இடமளிக்க வேண்டும்.

இலங்கைக்குள் தலையீடுகளை மேற்கொள்வதற்கான ஓர் ஆயுதமாக மனித உரிமைகளைப் பயன்படுத்துவதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (நி)


# மணிவிழா வாழ்த்துக்கள்




திரு. கதிர்காமு
முருகானந்ததாஸ்
(உதவி அதிபர்)

எமது பாடசாலையில்
பன்னிரெண்டாண்டுகள்
விஞ்ஞான பாட ஆசிரியராக
சேவையாற்றி 08.03.2022
அன்று ஓய்வு பெறும் அன்பு
ஆசானைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்

(10548)

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன் புரிச் சங்கம்
யா/ வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை


# தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் அரசு இணைந்து செயற்பட வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து

(ஜெனிவா)

சிவில் சமூகம், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான துன்புறுத்தலை நிறுத்துமாறு அமெரிக்கா இலங்கையை வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் நேற்று முன்தினம் பேசிய அமெரிக்கா, பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான இலங்கையின் முயற்சியையும் 40 இற்கும் மேற்பட்டவர்கள் சமீபத்தில் விடுவிக்கப்பட்டமையும் வரவேற்றுள்ளது.

இருப்பினும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு இணங்க பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கருத்துச் சுதந்திரம் இவற்றுள் முக்கியமானது என்றும் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு தமிழ், முஸ்லிம் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் இணைந்து நிரந்தரமான அரசியல் தீர்வை முன்னெடுக்க வேண்டும் என் றும் மேலும் நல்லிணக்கத்தை மேம்படுத்த, காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் ஆகியவை திறம்பட, சுதந்திரமாக, வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (நி)

## ஐ.நா மனித உரிமை பேரவையில்

# இலங்கைக்கு ஆதரவாக ரஷ்யா மற்றும் பெலாரஸ்

(ஜெனிவா)

உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு தொடர்பாக பொருளாதாரத் தடைகளை எதிர்நோக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ரஷ்யாவும் பெலாரஸும் ஆதரவு தெரிவித்துள்ளன.

மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் நேற்று முன்தினம் பேசிய ரஷ்யா, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை செய்து தருவதாக கூறியது.

போருக்குப் பின்னர் இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க முயற்சிகளை பெலாரஸ் பாராட்டியுள்ளது.

இதேவேளை, பல சவால்களுக்கு முகங்கொடுத்து மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கும் பாதுகாப்பதற்கும் இலங்கை அரசாங்கத்தின் நேர்மையான முயற்சிகளை வடகொரியாவும் பாராட்டியுள்ளது. (நி)


**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2020/ 2021**
**Bachelor of Business Management Degree Program 2020/ 2021**
**புதிய அனுமதி - 2022**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடாத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருட கால வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள் :**

❖ க.பொ.த. (உ/த) பரீட்சை - 2019 அல்லது அதற்கு முன்னர் எப்பாடப் பிரிவில் இருந்தாயினும் சித்தியடைந்திருப்பதுடன் பொது அறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% ஆன புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

அல்லது

❖ ஏதாவது ஒரு பிரிவில் NVQ மட்டம் 4 அல்லது அதற்கு மேல் பூர்த்தி செய்தவர்கள் (சித்தியடைந்த வருடம் 2019 அல்லது அதற்கு முன்)

அல்லது

❖ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**வியாபார முகாமைத்துவமாணி முதலாம் வருட தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல் :**

❖ பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட, 1ம் வருடத் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருவதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள், வியாபார முகாமைத்துவமாணி இரண்டாம் வருட கற்கைநெறிக்கு, உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.
மேலதிக விபரங்களுக்கு : http://www.codl.jfn.ac.lk/wp-content/uploads/2022/02/Exemption.png

முக்கிய குறிப்பு : இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் உள்வாரியாக பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு :**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டின் மூலமும் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல் :**

❖ யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை)

அல்லது

www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

❖ விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000.00 இனை 050122150001411 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி, பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவங்கள் நேரடியாக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்கலாம்.

அல்லது

பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு -2020/2021" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 08.04.2022 (வெள்ளிக்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

மேலதிக விபரங்களுக்கு 021222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்** (C-3915)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 8 மாதக் குழந்தை உட்பட ஐவர் உடல் கருகிப்பலி

(சென்னை)

இந்தியாவின் கேரள மாநிலம் திருவனந்தபுரம், தளவபுரம் வர்கலா நகரிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக 8 மாதக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் தங்களுக்கு சொந்தமான வீட்டில் இரண்டாவது மாடியில் வசித்து வந்துள்ளனர். இந்நிலையில், நேற்று அதிகாலை 1.45 அளவில் குறித்த வீட்டில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இதனை அவதானித்த அப்பகுதி பொதுமக்கள், தீயணைப்பு பிரிவினருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த தீயணைப்பு பிரிவினர், உடல் கருகி உயிரிழந்த 5 பேரின் சடலங்களை மீட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)



## உக்ரைன் ஜனாதிபதிக்கு செக் குடியரசின் விருது

(கீவ்)


ரஷ்யாவின் படையெடுப்பினை எதிர்கொள்ளும் துணிச்சல் மற்றும் தைரியத்துக்காக உக்ரைன் ஜனாதிபதி வோலோ டிமிர் ஜெலன்ஸ்கிக்கு மிக உயர்ந்த அரச விருதை வழங்க செக் குடியரசு முடிவு செய்துள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி மிலோஸ் ஜெமான் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஒக்டோபர் இறுதியில் செக் குடியரசின் அரச விருது வழங்கும் விழா நடைபெறும் போது உக்ரைன் ஜனாதிபதிக்கு விருது வழங்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

மிலோஸ் ஜெமான் 2013 இல் பதவியேற்றதிலிருந்து ரஷ்யாவுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ளார். ஆனால் பெப்ரவரி 24 அன்று உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிலிருந்து ரஷ்ய ஜனாதிபதி புடினை அவர் விமர்சித்து வருகிறார். (நி)

## எந்த ... முடிவை...

### கிரிமியாவை ...



உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை 13 ஆவது நாளை எட்டிய நிலையில், தலைநகர் கீவ்வை நோக்கி ரஷ்யப் படைகள் தொடர்ந்து முன்னேறி வருவதுடன், இர்பின், வினிட்ஷா நகரங்களில் குண்டு மழை பொழிந்து வருகின்றன.

## போருக்கு மத்தியிலும் தனது குழந்தையை பார்க்க மருத்துவமனை சென்ற பொலிஸ் அதிகாரி

(கீவ்)

உக்ரைனில் தொடர்ந்து வரும் போர்ச்சூழலின் மத்தியில், தலைநகர் கீவ்வில் பிறந்துள்ள தனது குழந்தையைப் பார்ப்பதற்கு சிறிது நேரம் ஒதுக்கிய கீவ் நகர பொலிஸ் அதிகாரிக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

உக்ரைனில் ரஷ்யா தாக்குதல் நடத்திவரும் நிலையில், அந்த நாட்டின் சில முக்கிய நகரங்களை ரஷ்ய இராணுவம் முழுவதுமாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

மேலும் தலைநகர் கீவ்வை ரஷ்ய இராணுவ துருப்புகள் சுற்றிவளைத்து தொடர்ந்து ஷெல் தாக்குதல் மற்றும் ஏவுகணை தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் தலைநகர் கீவ்வை ரஷ்ய இராணுவம் எப்போது வேண்டும் என்றாலும் ஆக்கிரமிக்கலாம் என்ற பதற்றத்திற்கு நடுவில் கீவ் நகர பொலிஸ் அதிகாரி ஒருவர், அங்குள்ள மகப்பேறு மருத்துவனையில் பிறந்துள்ள தனது



ஆண் குழந்தையை பார்ப்பதற்கு சிறிது நேரத்தை ஒதுக்கியிருப்பது பாராட்டை பெற்று வருகிறது.

அதேசமயம் அவரது மனைவி மற்றும் குழந்தைக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதற்காக அவருடன் அவரது நண்பர்களும் தங்களது துப்பாக்கிகள் மற்றும் கவச உடைகளுடன் வந்திருந்தது கூடுதல் கவனத்தை ஈர்த்துள்ளது.

தாய்நாட்டை பாதுகாக்கும் முக்கிய பொறுப்பில் இருக்கும் பொலிஸ் வீரர்களின் இந்த கனிவான காதல் நிறைந்த செயல் பொதுமக்கள் அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது. (நி)

## சர்வதேச நீதிமன்ற விசாரணையை புறக்கணித்தது ரஷ்யா

(மொஸ்கோ)

உக்ரைன் விவகாரத்தில் சர்வதேச நீதிமன்ற விசாரணையை ரஷ்யா புறக்கணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீதான தாக்குதலை நிறுத்த ரஷ்யாவுக்கு உத்தரவிட வேண்டுமென சர்வதேச நீதிமன்றத்தில் உக்ரைன் வலியுறுத்திய நிலையில், இந்த விசாரணைக்கு ரஷ்யா தனது பிரதிநிதியை அனுப்பவில்லை.

இந்த விசாரணையில் பங்கேற்க தங்கள் அரசாங்கத்துக்கு விருப்பமில்லை என நெதர்லாந்துக்கான ரஷ்யத் தூதர் நீதிபதிகளிடம் தெரிவித்துள்ளார்.

'உக்ரைனின் கிழக்கு பிராந்தியங்களான லுஹான்ஸ்க், டொனட்ஸ்க் ஆகியவற்றில் இனப் படுகொலைகளைத் தடுக்கும் நோக்கில் உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக ரஷ்யா கூறியுள்ளது. ஆனால், ரஷ்யா கூறுவது கொடூரமான பொய்.

இந்த விசாரணையை ரஷ்ய பிரதிநிதி புறக்கணித்திருப்பதிலிருந்தே உண்மையை அறிந்துகொள்ளலாம்.

எனவே, இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்தும்படி ரஷ்யாவுக்கு உத்தரவிட வேண்டும்' என உக்ரைன் பிரதிநிதி [illegible] (நி)

## மான்களில் ஒமிக்ரோன் கண்டுபிடிப்...



(வோஷிங்டன்)

நியூயோர்க்கில் சில மனிதர்களின் மாதிரியில் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் வைரஸிற்கான அறிகுறிகள் வெள்ளை நிற மான்களில் இருப்பதால், மனிதர்களிடம் இருந்து அவற்றுக்கு பரவி இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அமெரிக்காவில், அயோவா மாகாணத்தில் வாழும் மான்களை வைத்து அமெரிக்க விஞ்ஞானிகள் ஒரு ஆய்வு நடத்தினர்.

இந்த மான்கள் நியூ யோர்க்கி... ஸ்டேடன் தீவில் வாழ்ந்து வரு...கின்றன.

சுதந்திரமாக வாழ்ந்து வரு... உயிரினங்களில் ஒமிக் ரோ... கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல்முறை ஆகும்.

மான்களிடம் இருந்து மனி...தர்களுக்கு கொரோனா பரவுவது தொடர்பாக இதுவரை உ...தியான ஆதாரம் கிடைக்...வில்லை. இருப்பினும் அதற்கு வாய்ப்பு இருக்கிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு


# முடிவும் எட்டப்படாமல்

# டந்த 3 ஆம் கட்டப் பேச்சுவார்த்தை

## ரஷ்யாவின் பகுதி என அறிவிக்குமாறு நிபந்தனை விதிப்பு

(போலந்து)

**ரஷ்யா, உக்ரைன் நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற, 3 ஆவது கட்டப் போர் நிறுத்தம் குறித்த சமாதான பேச்சுவார்த்தை எந்த முடிவும் எட்டப்படாமலேயே முடிவடைந்தது.**



உணவு, குடிநீர் இல்லாமல் தவித்து வரும் ஆயிரக்கணக்கான பொதுமக்களை பொலிஸார் மற்றும் உக்ரைன் இராணுவத்தினர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

உக்ரைன்- ரஷ்யா பிரதிநிதிகள் நடத்திய 2 கட்டப் பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படாத நிலையில், போலந்து எல்லை அருகே ஏற்கனவே பேச்சுவார்த்தை நடைபெற்ற இடத்திலேயே நேற்று மீண்டும் சந்திப்பு நடைபெற்றது.

கிரிமியாவை ரஷ்யாவின் பகுதி என்றும் Donetsk மற்றும் Luhansk பகுதிகளை தன்னாட்சி பெற்ற பகுதிகள் என அறிவித்து உக்ரைன் அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வருவது உள்ளிட்ட நிபந்தனைகளை ரஷ்யப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

எந்த முடிவும் எட்டப்படாமல் பேச்சுவார்த்தை முடிந்தபோதும், 4 ஆவது கட்டப் பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், போர் நடைபெற்று வரும் பகுதிகளில் இருந்து மனிதாபிமான அடிப்படையில் மக்கள் வெளியேறிச் செல்ல நேற்று முதல் தடையிருக்காது என ரஷ்யப் பிரதிநிதி தெரிவித்தார். (நி)

## 1999 ஆம் ஆண்டு ஏர் இந்தியா விமானத்தை கடத்திய தீவிரவாதி சுட்டுக்கொலை




(இஸ்லாமாபாத்)

1999 ஆம் ஆண்டு ஐசி-814 என்ற ஏர் இந்தியா விமானத்தை கடத்திய தீவிரவாதிகளில் ஒருவரான ஜாஹூர் மிஸ்திரி என்ற ஜாஹித் அகுந்த் நபர் அடையாளம் தெரியாத நபர்களால் பாகிஸ்தானின் கராச்சியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மார்ச் 1 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடத்தல்காரர்கள் ஐசி-814 விமானத்தின் 176 பயணிகளை ஏழு நாட்களுக்கு பிணைக் கைதிகளாக வைத்திருந்தனர். விமானம் காத்மண்டுவில் இருந்து புறப்பட்டு டில்லிக்கு பயணித்த போது கடத்தப்பட்டு ஆப்கானிஸ்தானின் காந்தஹாருக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்தக் கடத்தல் நடவடிக்கைக்கு பாகிஸ்தானின் இராணுவ உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ. ஆதரவு அளித்ததாகவும் இந்திய தரப்பில் குற்றம்சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நட்பு நாடுகள் பட்டியலில் இருந்து 17 நாடுகளை நீக்கியது ரஷ்யா



(மொஸ்கோ)

உக்ரைன் மீதான போர் விவகாரத்தில் தங்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்காமல் எதிர் நிலைப்பாட்டை எடுத்த 17 நாடுகளை நட்பு நாடுகள் பட்டியலில் இருந்து ரஷ்யா நீக்கியுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம், தென்கொரியா, உக்ரைன், சுவிட்சர்லாந்து, ஐஸ்லாந்து, லிச்சென்ஸ்டீன், மொனாக்கோ, மாண்டினீக்ரோ, நியூஸிலாந்து, நோர்வே, தாய்வான், சான் மரினோ, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுக்கும் விவகாரத்தில் ஐ.நாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களுக்கு இந்தியா, சீனா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட சில நாடுகளைத் தவிர ஏனைய ஐரோப்பிய நாடுகள் போன்றவை ரஷ்ய எதிர்ப்பு நிலையை கடைப்பிடித்தது.

அது மட்டுமல்லாமல், மேற்குறித்த 17 நாடுகள், ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதித்ததோடு, உக்ரைனுக்கு ரஷ்ய துருப்புக்களை எதிர்கொள்வதற்காக இராணுவ உதவி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி)

## உக்ரைனில் வான் தாக்குதலில் 13 பேர் உயிரிழப்பு



(கீவ்)

உக்ரைனில் பேக்கரி தொழிற்சாலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 13 பேர் உயிரிழந்ததாக மீட்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

ரஷ்ய இராணுவத்தினரின் தாக்குதலில் இதுவரை உக்ரைனில் ஆயிரத்து 207 பேர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புளியங்குளத்தில் காணி சுவீகரிப்பு மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

(குருமன்காடு)

**பொதுமக்களுக்கு சொந்தமான ஐம்பதுக்கு மேற்பட்ட ஏக்கர் காணியினை தனியொருவருக்கு வழங்குவதற்காக நில அளவை திணைக்களம் மற்றும் பிரதேச செயலகத்தால் குறித்த காணிகளை அளவீடு செய்வதற்கான முயற்சியினை புளியங்குளம் பொது மக்களும் காணி உரிமையாளர்களும் மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து நேற்று முன்தினம் தடுத்து நிறுத்தினர்.**



புளியங்குளம், ராமனூர் மற்றும் நாவற்குளம் குளங்களினுடைய வயற்காணிகள், பழையவாடி- புளியங்குளம் வீதியிலுள்ள பொதுமக்களின் மேட்டுக்காணிகள், வயலுக்கு செல்லும் வீதிகள், பொதுமக்களின் மேய்ச்சல் தரைகள் உள்ளடங்கலான 50 ஏக்கர் காணியினை தனியார் ஒருவருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இச் செயற்பாட்டிற்காக காணிகளை அளவீடு செய்ய முயன்ற போது பொதுமக்கள் அதனை தடுத்து நிறுத்தியதுடன், குறித்த காணிகள் அமைந்துள்ள லக்சபானா மின்சார இணைப்பின் கீழான பகுதி அளவீடு செய்வதன் மூலமும், அதன் கீழ் பயிர்ச் செய்கை செய்வதன் மூலமும் ஏற்படும் சூழல் சார் ஆபத்துக்களைச் சுட்டிக்காட்டி பொதுமக்களால் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பினையடுத்து நில அளவைத் திணைக்களம் மற்றும் பிரதேச செயலக காணிப் பிரிவினர் குறித்த அளவீட்டு நடவடிக்கையை கைவிட்டு திரும்பிச் சென்றனர். (4-6-250)

# முதியவரின் பணத்தை திருடியவர் இளைஞர்களால் மடக்கிப் பிடிப்பு

(மன்னார்)

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு சென்ற அரச பேருந்தில் பயணம் செய்த முதியவரிடம் இருந்து சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பணத்தை நானாட்டான் பேருந்து தரிப்பு நிலையத்தில் பயணிகள் ஏறுவதற்காக நிறுத்திய போது பறித்துச் சென்ற இளைஞர் ஒருவரை அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

உடனடியாக முருங்கன் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த முருங்கன் பொலிஸாரிடம் பணத்தை திருடிய இளைஞரை இளைஞர்கள் ஒப்படைத்தனர். உடனடியாக குறித்த இளைஞரையும், முதியவரையும் மேலதிக விசாரணைக்காக பொலிஸார் முருங்கன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். (4-6-285)

# ஹெரோயினுடன் இளைஞன் கைது

(சாவகச்சேரி)

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் நேற்று செவ்வாய்க் கிழமை காலை சாவகச் சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதான இளைஞனை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான முயற்சிகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை 1195 ஹெக்டேயரில் சிறுபோகம்

## அரச அதிபர் ரூபவதி தெரிவிப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை சுமார் 1195 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என கிளிநொச்சி அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இயற்கை உரத்தை பயன்படுத்தி நஞ்சற்ற விவசாயம் மேற்கொள்ள வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக நேற்று அரச அங்கீகாரம் பெற்ற இயற்கை உர கம்பனி உடனான கலந்துரையாடல் அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் 57 படைப்பிரிவின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஆர்.ஆர்.பி.ஜெயவர்தன, விவசாய திணைக்கள அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (4-6-316)

# விபத்து; ஒருவர் படுகாயம்

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலை பகுதியில் தனியார் பேருந்து ஒன்றின் பின்னால் சென்றவர் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலை ஏ-9 வீதியில் யாழ்.நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றின் பின்னால் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் பேருந்தின் பின்னால் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

காயமடைந்தவர் பளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-316)

# தமிழ் எழுத்து பிழைகளுடன் பெயர்ப் பலகைகள்




(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பகுதிகளில் உள்ள அரச திணைக்களங்களின் பெயர்ப் பலகைகளில் காணப்படுகின்ற தமிழ் மொழித் தவறுகளை திருத்துவதற்கு அரச கரும மொழிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

பூநகரி புனரின் எனப் பிழையாகவும் மண்டைக் கல்லாறு மாந்தைக்கல்லாறு எனப் பிழையாகவும் வீரபாண்டியன் முனை வீரவண்டியன் முனை எனப் பிழையாகவும் கொடுதாவில் கொவிக் கொடுத்தாவில் எனப் பிழையாகவும் கரியாலைநாகபடுவான் கரிகளைநாகபடுவான் எனப் பிழையாகவும் பெயர்ப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன. இவ்வாறான தமிழ் மொழிப் பிழைகள் எதிர்காலத்தில் இளம் சந்ததியினர் பிழையாகப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புகளை உருவாக்கி உள்ளன.

ஊர்ப் பெயர்களை சரியான தமிழில் பெயர்ப் பலகைகளில் வெளிப்படுத்துவதற்கு அரச கரும மொழிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தவிசாளர் தெரிவித்தார். (4-350)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 140 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 450 | 400 |
| தக்காளி | 230 | 220 | 260 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 100 | 80 |
| கோவா | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 200 | 300 | 400 | 400 |
| பூசணி | 120 | 140 | 140 | 150 |
| புடோல் | 200 | 200 | 200 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 120 | 180 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 135 | 140 | 180 |
| பாகற்காய் | 400 | 300 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 150 | 180 | 240 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 140 |
| பயற்றங்காய் | 200 | 180 | 200 | 200 |
| லீக்ஸ் | 160 | 140 | 160 | 200 |
| பீற்றூட் | 300 | 150 | 200 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 300 | 1000 | 1200 | 1200 |
| போஞ்சி | 250 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 140 | 150 | 160 | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 90 | 80 | 80 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 150 | 160 | 160 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 200 | 280 |
| முள்ளங்கி | 50 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | -- | -- | 120 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின அழிப்பிற்கு நீதிகோரி ஐ.நா. முன்றலில் போராட்டம்



(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையிடலை மையப்படுத்திய விவாதம் முடிவடைந்த பின்னர், மனித உரிமை பேரவை முன்றலில் புலம்பெயர் தமிழ்மக்களின் நீதிகோரும் போராட்டம் இடம் பெற்றது.

இலங்கையில் தமிழ் மக்கள் மீது இடம்பெற்ற இனப்படுகொலைக்கு அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற முதன்மை கோரிக்கையுடன் இந்தப் போராட்டம் இடம்பெற்றிருந்தது.

இந்தப் போராட்டத்தில் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ஒரு இனப்படுகொலை குற்றவாளி எனவும் இலங்கை அரசாங்கத்தை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்தவேண்டும் என்பது போன்ற கோசங்கள் முன்வைக்கப் பட்டன. (நி)

# அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்கவில்லை

(கொழும்பு)

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பங்குபற்றவில்லை

விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரின் அமைச்சுப்பதவி பறிக்கப் பட்டதன் பின்னர் நடைபெற்ற முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் என்ன காரணத்திற்காக ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை. (நி)

# டொலர் ஒன்றுக்கு 230 ரூபாய் மத்திய வங்கி அறிவித்தல்

(கொழும்பு)

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் செலாவணி வீதத்தில் மேலும் நெகிழ்ச்சித்தன்மை சந்தைகளுக்கு அனுமதிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இதற்காக வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் அமெரிக்க டொலர் ஒன்றுக்கு 230 ரூபாயினை விஞ்சாத மட்டங்களில் இடம்பெறுமென இலங்கை மத்திய வங்கி கருதுகின்றது.

இலங்கை மத்திய வங்கியானது உள்நாட்டு வெளி நாட்டுச் சந்தையிலான அசைவுகளைத் தொடர்ந்தும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது.

அதற்கேற்ப பொருத்தமான கொள்கைத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் மத்திய வங்கியின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கம் கடந்த பெப்ரவரியில் 2.3 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவானது. இது கடந்த ஜனவரியில் நிலவிய தொகையை விட 2 சதவீதம் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# மகளிர் தினத்தை கௌரவித்து ‘டூடுல்’ வெளியிட்ட கூகுள்

(வோஷிங்டன்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, கூகுள் நிறுவனம் நேற்று சிறப்பு ‘டூடுல்’ வெளியிட்டது.

பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னேறி இருப்பதை குறிப்பிடும் வகையில் அது அமைந்திருந்தது.

மேலும், சிறப்பு அனிமேஷன் வீடியோவையும் கூகுள் வெளியிட்டது.




மகளிர் தினத்தின் வரலாற்றுப் பின்னணி, அதன் முக்கியத்துவம் ஆகியவை அதில் விளக்கப்பட்டு இருந்தன. (நி)

# சுற்றுலாப் பயணிகளுக்கு நீண்ட கால விசா

(கொழும்பு)

இலங்கையில் முதலீடு செய்யும் வெளிநாட்டு பிரஜைகளுக்கு நீண்டகால விசாக்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையில் முதலீடு செய்யும் சுற்றுலாப் பயணிகளுக்கு சலுகை வழங்கும் நோக்கில் குறித்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்த நடவடிக்கையானது வெளிநாட்டு நேரடி முதலீட்டை கணிசமான அளவில் அதிகரிக்கும் என நம்புவதாக அவர் தெரிவித்தார். (நி)

## இன்று ஒரு தகவல்

# பழியும் பாவமும்

“என் மாமியார் நான் ஏன் விடியற் காலையில் எழுந்திருக்கவில்லை?” என்று கேட்டார்கள்.

இப்படி புது மருமகள் பானு தன் பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் சொல்லி வைத்தாள் . அன்று மாலை ஊர்க்கோடியிலிருந்து ஒரு பெண் வந்து கேட்டாள். “ஏன்டி பானு உன் மாமியார் பயங்கர இராட்சசியாமே?”

விஷயம் வேறொன்றுமில்லை. ஊர் முழுக்க அந்தச் செய்தி சுற்றி வந்து கண், காது, மூக்கு எல்லாம் வைக்கப் பெற்று இப்படி உருவெடுத்து விட்டது.

ஆளுக்கு ஆள் ஒரு செய்தியைத் தத்தம் நோக்கம் போல் கையாள்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது.

நாமும் இன்னொருவரும் அல்லது பலரும் சம்பத்தப்பட்ட சம்பவத்தை , ஒரு பேச்சை, கட்டாயம் காரணமாகவோ இயல்பாகவோ வேறு ஒருவரிடம் சொல்ல நேரிட்டால் அதை எள்ளளவும் கூட்டாமல் மிகைப்படுத்தாமல் சொல்கின்றோமா என்றால்–

பெரும்பாலும் இல்லை என்றே சொல்லிவிடலாம். நடந்தது ஒன்றாக இருக்க அதைப்பத்தாக ஆக்கிப் பெரிதுபடுத்திச் சொல்பவர்களே அதிகம். நம்மையுமறியாமல், இக்குணம் நம் இரத்தத்தில் ஊறிப் போயிருந்தால், அதை உடனே மாற்றிக் கொள்ளும் முயற்சியில் இறங்கி விட்டு மறு வேலை பார்க்க வேண்டும்.

நடந்தவற்றை சுவாரசியமாகச் சொல்கின்ற பேர்வழி என்று சிலர் தங்கள் சொந்தக்கருத்து, தாங்களே செய்து கொண்ட கற்பனைகள்,புதிய அனுமானங்கள் ஆகியவற்றைச் சேர்த்துச் சொல்லி வைப்பார்கள்.

விளைவு?

சொன்னவருக்கும் அதை வேறு நபர் மூலமாக அறிய நேர்ந்தவருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டுவிடும். எவருக்கு இடையேயும் உள்ள நல்லுறவு கெட நாம் காரணமாக இருக்கக்கூடாது.

மாறாக, விரிசல் உறவுகளை வார்த்தைச் சாதுரியம் என்னும் பசையால் ஒட்டவைக்க இயலுமா என முயல வேண்டும். இத்தகைய விடயங்களை அடக்கியே வாசிக்க வேண்டும்.

இனி மீண்டும் பழைய பிரச்சினைக்கு வருவோம். இதனால் அவப்பெயரும் எதிர்பாராத விளைவுகளும் ஏற்படும். ஒரு வார்த்தையை மாற்றிச் சொன்னால் கூட ஓராயிரம் பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

“ஏனய்யா நான் இப்படித்தானே சொன்னேன்? நீ அப்படிச் சொன்னாயாமே?” என்று சம்பத்தப்பட்டவரே கேட்டுவிட்டால் முகத்தை எப்படி வைத்துக் கொள் வது?

சிலரைச் சேர்த்துக்கொள்ளலாம். இவர்கள் உள்நோக்கம் ஏதுமின்றி ஆனால் அதன் முக்கியத்துவத்தை உணராது ஒன்றிரண்டைச் சேர்த்துச் சொல்லியோ, தவறாகப் புரிந்து கொண்டவற்றைச் சொல்லியோ காலத்தை ஓட்டிக் கொண்டிருப்பார்கள். இத்தகைய தவறு கூட நடந்து விடாத வண்ணம் நாம் விழித்துக் கொள்ள வேண்டும்.

எப்படி?

கேட்டுக்கொண்டிருப்பவரைத் தவிர்த்து, அதைச் சொல்ல நேர்ந்தவரும் அந்த நேரத்தில் இடத்தில் இருப்பதாக மானசீகமாக நம்ப வேண்டும். அப்படி நீங்கள் மனப்பூர்வமாக எண்ணினால் அதே வார்த்தைகள் வந்துவிழும்.

அப்படிச் செய்யாவிட்டால் நமக்கும் பழியும் பாவமும் வந்து சேரும்!

இவையிரண்டும் நமக்கு ஏன்?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

# தூக்கம் வராதே!



சாளுவ மன்னன் ஒருநாள் கனவில் தனக்கு நள மகாராஜன் வந்து ஒரு புது ரகத் தின்பண்டத்தைக் கொடுத்தது போலக் கண்டான். அதுபோன்ற தின்பண்டத்தைச் செய்து தருமாறு தன் சமையல்காரனுக்குக் கட்டளை இட சமையல் கட்டிற்குச் சென்றான். அப்போது சமையல்காரன் அது போன்ற தின்பண்டத்தையே தயாரித்துத் தின்று கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான்.

தன்னையே மன்னன் உற்றுக் கவனிப்பதைக் கண்ட சமையல்காரன் சட்டெனத் தான் சாப்பிடும் பண்டத்தை எடுத்து மறைத்தான். மன்னனோ "அது என்ன? இப்படிக் கொடு. நானும் சாப்பிடுகிறேன்," என்றான். சமையல்காரனோ "இதையெல்லாம் தாங்கள் சாப்பிடக்கூடாது. ஒரே புளிப்பும் காரமுமாய் இருக்கும்" என்றான். மன்னனோ அதை எடுத்து சாப்பிட்டுவிட்டு "பேஷ்! ரொம்ப நன்றாக இருக்கிறது. இனிமேல் இந்தத் தின்பண்டத்தை வாரத்திற்கு ஒருமுறையாவது தயாரித்து எனக்குச் சாப்பிடக் கொடு" என்று கூறிவிட்டுப் போனான்.

ஆனால் அன்றிரவு மன்னனால் சரியாகத் தூங்க முடியவில்லை. வயிற்றில் வலியும் இரைச்சலும் ஏற்பட்டது. எனவே படுக்கையில் உட்கார்ந்து ராணியை எழுப்பித் தனக்குத் தூக்கம் வரவில்லை என்று கூறினான். அதைக் கேட்ட ராணி "எப்படித் தூக்கம் வரும்? நம் மகனின் மோசமான நடத்தை பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருப்பீர்கள். அவனுக்கோ இளம் வயது. விரைவில் திருந்தி விடுவான். கவலைப்படாதீர்கள்." என்றாள்.

அதுவரை மன்னனுக்குத் தன் மகனின் நடத்தை பற்றி தெரியாது. ராணி சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்பட்டான். ராணியோ மறு நிமிடமே நன்கு தூங்கலானாள்.

மன்னனுக்கு வயிற்று வலி அதிகரித்தது. அதனால் ராஜா மருத்துவரை அழைத்துவர ஆளை அனுப்பினான்.

மருத்துவரும் வந்து மன்னனைப் பரீட்சித்துப் பார்த்து விட்டு அவன் உடலில் எவ்வித கோளாறும் இல்லையே எனக் கண்டு திகைத்து நின்றான். அப்போது அங்கு வந்த பொக்கிஷ அதிகாரி "அரசே! தங்களுக்குத் தூக்கம் வரவில்லை என்று கேள்விப்பட்டு வந்தேன். பொக்கிஷத்தில் பணம் இல்லை, செலவு அதிகம் என்று தானே கவலைப்படுகிறீர்கள். அதற்கு ஏதாவது வழியா இராது? விரைவில் கண்டுபிடிக்கலாம். கவலைப்படாதீர்கள்" என்றான்.

இதேசமயம் அங்கு வந்த சேனாதிபதி "அரசே! தாங்கள் சரியாகத் தூங்கவில்லையாமே! அண்டை நாட்டு மன்னன் நம்மைத் தாக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறான் என்று கவலைப்படுகிறீர்களா? நம் படைகளின் பலம் மிக அதிகம். அவனது படைகளை நாம் விரட்டிவிடுவோம்" என்றான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




**இராமனைத் தழுவிக் கொள்ளுதல்**

வந்தவனைத் தசரதன் தன் தோள்கள் ஆரத் தழுவிக் கொண்டான். அத்தழுவலில் புதிய பொருள் இருந்தது போலக் காணப்பட்டது. அத்தோள்கள் திண்மை உடையனவா? என்ற உண்மையைக் காண எடுத்துக் கொண்ட முயற்சி போல இருந்தது.

"நிலமகள் தன்னைச் சுமக்க வலிமை மிக்க தோள்களை நாடுகிறாள்; முதியவன் நான்; ஆட்சிச் சுமையால் தளர்ந்து வாடுகிறேன்; வளர்ந்துவிட்ட நீ வந்து முட்டுக் கொடுக்க வேண்டும்".

நொண்டிக் குதிரை எத்தனை நாளைக்கு வண்டியை இழுக்கும்; அது சண்டித்தனம் செய்வதற்கு முன் முண்டி அடித்து நீ வந்து குடை சாயாமல் தாங்க வேண்டும். "மகனைப் பெறுவதற்கு எதற்காக? மலர்கள் பூக்கும் செடிகளை வளர்ப்பது போன்றது அன்று அது. மகனை மதலை என்பர் ஏன்?" தாங்கும் சக்தி அவனுக்கு உண்டு என்பதால், 'சுமை தாங்கி' மகன் என்று கூறுவர்.

"மக்களைப் பெற்றவர் மகாராசர் என்கிறார்கள்; ஏன்? அவர்கள் ஆட்சியைத் தாங்க வந்து நிற்பதால்" "பெற்றவர்க்குப் பெருங்கடமை செய்த பெருந்தகைகள் உன் முன்னோர், பகீரதன் கதை உனக்குத் தெரியாதா? செத்து மடிந்தவரின் சாம்பலுக்கு நித்திய பதவி தரக் கங்கையை வரவழைத்தான். அவன் அரிய முயற்சியை அகில உலகும் பாராட்டுகிறது."

"செல்வம் என்றால் உலகப் பொருட்கள் அல்ல; அவை நிலையாது கைமாறும். மக்கட் செல்வம்தான் மதிப்பு மிக்க செல்வம்; அது மட்டும் அன்று; யார் பெருமகிழ் விற்கும் மதிப்பிற்கும் உடையவர் தெரியுமா?"

'பதவியில் உயர்ந்தவன் இந்திரன்; சுக போகங்களை அனுபவிப்பதில் அவன் தொடர்ந்து இன்பம் அடைகிறான்' என்று கருதுகிறார்கள். 'மோன நிலையில் இருந்து தவம் செய்யும் ஞானிகள் பேரின்ப நிலை அடைகிறார்கள்' என்று பேசலாம். அது முழு உண்மையன்று, நன்மக்களைப் பெற்றவர்களே நானிலத்தில் நன் மதிப்புப் பெறுகின்றனர்".

'உன்னை நம்பி வாழ்ந்து கொண்டிருப்பவன் நான்; தோள் மேல் சுமந்து உன்னைத் தூக்கி வைத்து மகிழ்ந்து இருக்கிறேன்; கல்வியும் படைப் பயிற்சியும் தந்து உன்னை மாவீரன் ஆக்கினேன்;

சான்றோர் என்று உலகம் உன்னைப் புகழ்கிறது. நாட்டு மக்கள் நேசிக்கின்றனர்; சீதை கேள்வன் என்ற பெருமை உன்னைச் சார்கிறது. மணக் கோலத்தில் கண்ட நான் அரசு கோலத்தில் உன்னைக் காண விழைகின்றேன். "நான் காளைப் பருவத்தையும் கடக்கவில்லை; நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று நீ தள்ளிப் போட நினைக்கலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரம் மறைதான் றுதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா.
– திருஞானசம்பந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திறப்பதற்குப் பதினொரு பாட்டு! பூட்டுவதற்கு ஒரு பாட்டு!

திருநாவுக்கரசு நாயனாரும் திருஞான சம்பந்தரும் சமகாலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள். இருவரும் சேர்ந்து தல யாத்திரை மேற்கொண்டு சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெருமையாளர்கள்.

ஒருமுறை இவர்கள் இருவரும் திருமறைக்காட்டுக்கு (தற்போது வேதாரணியம்) சென்ற சமயம் அங்கு திருக்காடர் ஆலயத் திருக்கதவு நீண்டகாலமாகப் பூட்டியிருப்பதைக் கண்டனர்.

அதுகண்டு அப்பரும் சம்பந்தரும் மனம் நொந்து கொள்கின்றனர்.

ஆலயத்தின் திருக்கதவைத் திறப்பதற்கு திருக்கதவம் திறத்தல் திருப்பதிகத்தை திருநாவுக்கரசு நாயனார் பாடுகிறார்.

ஒருபாடல், இருபாடல் என்று பதினொரு பாடல்கள் பாடியதும் திருக்கதவு திறக்கப்படுகிறது.

இருவரும் இறைவனை வழிபட்டபின்னர், திருக்கதவைப் பூட்டுவதற்காக ஞானசம்பந்தர் பாடுகிறார்.

என்னே! ஆச்சரியம் ஒரு பாடலுடன் திருக்கதவு பூட்டப்படுகிறது.

ஆக, திருக்கதவைத் திறப்பதற்குப் பதினொரு பாடல்களைப் பாட வேண்டியிருந்தது.

ஆனால் திருக்கதவைப் பூட்டுவதற்கு ஒரு பாடல் போதுமென்றாகிறது.

இதன்மூலம் திறப்பது கடினம். பூட்டுவது சுலபம் என்ற தத்துவம் உணர்த்தப்படுகிறது.

அதுசரி, எதற்காகத் திடீரென்று திருமறைக்காட்டுத் திருப்பதிகம் பற்றி இங்கு பிரஸ்தாபிக்கின்றீர்கள் என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கிறது.

எல்லாம் காரணத்தோடுதான். இப்போது இலங்கையில் கதவு பூட்டப்படுகின்ற காலம்.

அதாவது தொழில் நிறுவனக் கதவுகள் பூட்டப்படுகின்ற காலம் என்றோம்.

இதைப் பூட்டுவதற்கு அந்தச் சம்பந்தரும் தேவையில்லை இந்தச் சம்பந்தரும் தேவையில்லை. ஒரேயொரு நிதியமைச்சர் போதுமாம்.

அப்படியானால், கதவைப் பூட்டுவதற்கு நிதியமைச்சரும் பதிகம் பாட வேண்டுமா? என்றால் இல்லவே இல்லை.

எரிவாயுவை நிறுத்தினால், மின்சாரத்தைத் தடை செய்தால், கோதுமைமாவை இறக்குமதி செய்யாமல் விட்டால், காகிதாதிகளின் இருப்பைக் கவனிக்காமல் போனால்; இருந்த டொலர் எல்லாவற்றையும் குண்டுகளாக வெடிக்க வைத்து இப்போது எரிபொருளுக்கு கொடுப்பதற்கும் டொலர் இல்லையென்று கைவிரித்தால், எல்லாக் கதவும் பூட்டப்படும்.

அதுவே நம் இலங்கையில் நடக்கிறது. கதவு பூட்டப்பட்டிருப்பது தெரியாமல் இருப்பதற்காகவோ என்னவோ தெருவிளக்குகளை அணைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆம், ஒளி இழந்த நாடாக இலங்கை இருளுக்குள் மூழ்கிறது.

## நவாலியில் வீட்டில் நின்ற வான் மீது தாக்குதல்

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவாலி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தரித்து நின்ற ஹையேஸ் வாகனம் மீது இனந்தெரியாத கும்பல் ஒன்று தாக்குதல் நடாத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

நேற்று முன்தினமிரவு நால்வர் அடங்கிய குழு ஒன்று இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்று குறித்த தாக்குதலை நடாத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-33,104)

## கொரோனா; 11 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 11 கோவிட் மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,350ஆக அதிகரித்துள்ளது. (ம)

## அங்குரார்ப்பண நிகழ்வு

சுற்றுலாப் படகு சேவை அங்குரார்ப்பண நிகழ்வு இன்று புதன்கிழமை குருநகர் இறங்குதுறையில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறும்.

இதன் மூலம் எதிர்காலத்தில் குருநகர் இறங்குதுறையில் படகு சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-104)

## 7ஆவது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவை முன்னிட்டு

### யாழ்.பல்கலையில் திரைப்படக் காட்சிகள்

(யாழ்ப்பாணம்)

7ஆவது யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழா யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இன்று காலை 10.00 மணிக்கு நோகன்னஸ் நபேரின் "கேர்வ் போல்" என்ற ஜேர்மானிய அரசியல் அங்கதத் திரைப் படக் காட்சியுடன் ஆரம்பிக்கின்றது.

"கேர்வ்போல்" திரைப்படமானது அரசியல் கோமாளிகளை மையமாகக் கொண்ட உண்மைச் சம்பவத்தினைத் தழுவி எடுக்கப்பட்டது.

அடுத்து பகல் 1 மணிக்கு கௌரவ் மதனின் அறிமுக இந்தியத் திரைப்படமான "பாரா பை பாரா" காட்சிப்படுத்தப்படும்.

இது வாரணாசி மலைத் தொடரில் நிகழும் இறப்புகளைப் படம்பிடிக்கும்புகைப் படக்கலைஞரை மையமாகக் கொண்டதாகும்.

மாலை 4.45க்கு அய்சானா காசிம்பேக்கின் நெறியாள்கையில் உருவான கஜகஸ்தானிய அறிமுகத் திரைப்படமான "பயர்" (தீ) காட்சிப்படுத்தப்படும். இது இளவயது நடுத்தரவர்க்க குடும்பத்தவர்களின் பிரதிநிதியாக சித்திரிக்கப்படும் ரோலிக் என்பவனின் அன்றாட வாழ்க்கைக்கான போராட்டங்களைப் பேசுபொருளாகக் கொண்டு நகர்கிறது.

அத்துடன், பிற்பகல் 12.30 மற்றும் 3.30க்கு விருதுக்காகப் போட்டியிடும் போர்த்துக்கல், கம்போடியா, இலங்கை, இந்தியா மற்றும் ரஷ்ய நாடுகளின் குறுந்திரைப் படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இக்காட்சிகள் அனைத்தும் இலவசம். சினிமா ரசிகர்கள் அனைவரையும் இக்காட்சிகளில் பங்குபற்றித் திரைப் படங்களினைப் பார்க்குமாறு விழாக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை.

**யாழ்.பிரதேசத்தில்** அராலி வீதி-சங்கானை, துணைவி, மண்டைதீவு கடற்படை முகாம், மண்டைதீவு, பூம்புகார் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** முகத்தாங்குளம், 1வது பண்ணை, மடுகந்த டெலிகொம், மலையா பருத்திக்குளம், ஆசிக்குளம், மறக்கறம்பளை-கணேசபுரம், புபுதுகம ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** சி.இ.சி.பி (சிலாவத்துறை), சிலாவத்துறை கடற்படை முகாம், அகத்தி முறிப்பு, அகத்தி முறிப்பு திட்டம், அளவக்கை சிறுகுளம் திட்டம், அரிப்பு, அரிப்பு நீர்வழங்கல், ஆத்திமோட்டை, ஹனைஸ் நகர், கரடிக்குழி, காயக்குழி திட்டம், கொக்குப்படையான், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி நீர் வழங்கல் சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூளாங்குளம், கூழாங்குளம் திட்டம் (ஜீநாத் நகர்), மடுக்கரை, மணற்குளம், மறிச்சுக்கட்டி, மருதமடு, மேதன்வெளி, முள்ளிக்குளம், முசலி தேசிய பாடசாலையடி, பெரிய பொள்ளாச்சி பொற்கேனி, பாலைக்குழி, பாலைக்குழி திட்டம், பரிகாரிக்கண்டல், பெரிய பொள்ளாச்சி பொற்கேனி (பண்டாரவெளி), பிச்சைக்குளம், பிச்சை வாணிபங்குளம் திட்டம், பொன்தீவு கண்டல், கள்ளி மோட்டை புளியங்குளம், பொன்னாச்சி குளம், புதுக்காமம் கிராமம், புதுக்குடி யிருப்பு (சிலாவத்துறை), புதுவெளி, சின்னபொள்ளாச்சி பொற்கேனி திட்டம், சிலாவத்துறை, சின்ன பொள்ளாச்சி பொற்கேனி, தம்பட்டமுசலி, வெள்ளிமலை, செம்மண்தீவு நீர் வழங்கல் சபை, லைவ் ஸ்டாக் ப்ரீடர்ஸ் கோப் சொசைட்டி, செம்மண்தீவு, முருங்கன், ஆத்திமோட்டை, ஆத்திக்குழி, செம்மண்தீவு, இலந்தைமோட்டை, சூரியகட்டைக்காடு, பரப்பாங்கண்டல், பரிகாரிக்கண்டல் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

அப்போது எதேச்சையாக குருதேவர் நின்றிருந்த திசையில் பார்த்தார் ம-. பார்த்த கண்கள் பார்த்தபடி நின்றுவிட்டார். என்ன ஒரு காட்சி! குருதேவர் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தார். கண்கள் இமைக்கவில்லை. மூச்சுகூட நின்றுவிட்டதுபோல் தோன்றியது. ஒரு பக்தரைக் கேட்டபோது, 'இதுதான் சமாதி' என்று அவர் கூறினார். ம- இவ்வாறு இதுவரை கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லை. வியந்துபோன அவர், 'இறைவனைச் சிந்திப்பதன்மூலம் ஒருவர் இவ்வளவுதூரம் புற நினைவை இழந்துவிட முடியுமா என்ன! எவ்வளவு ஆழ்ந்த பக்தியும் நம்பிக்கையும் இருந்தால் இந்த நிலை ஏற்படும் தெரியவில்லையே' என்று நினைத்தார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை


கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 14

**கொழும்பு மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)**

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்திற்கு 40 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன்படி கொழும்பு மாவட்டம் 20 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்திற்கு 40 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். இதன்படி கொழும்பு மாவட்டம் 20 மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யக்கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

**கொழும்பு மாவட்டத்தில் 13 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 557 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 2,324,349 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 116,217 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**




கொழும்பு மாவட்டத்தில் 13 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 557 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 2,324,349 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 116,217 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் 06.12.2017 காலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக் கொள்ளப்பட்ட 10 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் படி கேட்டுப் பெற்றுக் கொள்ளப்பட்ட 12 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 22 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

சில பிரேரணைகளின் பரிந்துரைகளில் எல்லை நிர்ணயம் உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும், பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளின்) எல்லைகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தன. பரிந்துரைக்கப்பட்டவற்றில் தொகுதிகளுக்கு இடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும், பல ஆலோசனைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாததாலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும் இப் பிரேரணைகளை குழுவால் கருத்தில் எடுக்க முடியவில்லை.

அதுமட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப்பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன. அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத் தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத்தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) போன்றவற்றை விட பிரதேச செயலகங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது.

அதே நேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைப் கூறு போடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது.

எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது.

மேலும் அனைத்து இனத்தவர்களினதும் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து முடியுமான வகையில் குறிப்பிட்ட தொகுதிகளில் அவர்களின் சமூக விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

இரண்டு பிரேரணைகள் சில பிரதேச செயலக பிரதேசங்களில் பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை பரிந்துரைத்தன. அவற்றுள் ஒரு பிரேரணை மாவட்டத்தின் பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை பல இனங்கள் தொடர்பாக குறிப்பிட்டிருந்தது.

பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை உருவாக்குவதற்கு போதிய அளவு சனத்தொகை இந்த பிரதேச செயலகப் பிரதேசங்களில் இல்லை என்பதை குழு கண்டறிந்தது. ஆனாலும் தேர்தல் தொகுதிகளை உண்டாக்கும் போது இந்த பிரேரணைகளை கருத்தில் எடுத்துக் கொண்டுள்ளது.

சில பிரேரணைகள் குறிப்பிட்ட பிரதேசங்களில் சிறுபான்மை இனத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் படி கோரி இருந்தது. இன்னும் சில பிரேரணைகள் குறிப்பாக தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் வாழும், குறிப்பிட்ட பிரதேசங்களைச் சுட்டிக்காட்டி இருந்தன.

முழு மாவட்ட சனத்தொகையிலும் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 11.2% இலும் மற்றும் 10.7% இலும் உள்ளதை குழு அவதானித்தது. தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் போது பல் உறுப்பினர் தேர்தல் தொகுதிகளை உருவாக்காமல் இந்தச் சமூகங்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கின்ற வகையில் பிரேரணைகளை முடிந்த அளவு சேர்த்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல் உறுப்பினர் தேர்தல் தொகுதியில் பல்வேறு சமூகங்களின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் வாய்ப்பினையும் அப்பரிந்துரைகள் மூலம் அறிய முடியவில்லை. எனவே இதனை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்தாலும் எதிர்பார்க்கும் பிரதிபலனை மற்றைய இனத்தவர்கள் பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே குழு 2017 ஆம் திருத்தச் சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட தேர்தல் தொகுதிகளில் அந்தந்த சமூக விருப்பங்களை அந்த பிரதேசங்களில் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க முடிவு செய்தது.

**சில பிரேரணைகள் கொழும்பு மாவட்டத்தில் குறிப்பிட்ட பிரதேசங்களில் சிறுபான்மை இனத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தேர்தல் தொகுதிகளை உருவாக்கும்படி கோரி இருந்தது. முழு மாவட்ட சனத்தொகையிலும் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 11.2 % இலும் மற்றும் 10.7% இலும் உள்ளதை குழு அவதானித்தது. தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் போது பல் உறுப்பினர் தேர்தல் தொகுதிகளை உருவாக்காமல் இந்த சமூகங்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கின்ற வகையில் தொகுதிகள் உருவாக்கப்பட்டன.**

ஒன்பது (9) சமர்ப்பிப்புகளுக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை, ஏனென்றால் அவை எந்த முன்மொழிவுகளையும் கொண்டிருக்கவில்லை மற்றும் குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும் போது, சரித்திர பிரசித்தி பெற்ற பெயர் இடப்பட வேண்டிய தேவை இல்லாத சந்தர்ப்பத்தில் தொகுதிகளின் பெயர்கள், அத் தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத் தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில்...

பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, A,B,C,D,E,F,G,H,I,J ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு இன்று காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் இரண்டரை மணித்தியாலங்களுக்கும் மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதியினுள் ஒரு மணித்தியாலமும் 15 நிமிடங்களும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அவ்வாறே P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரையான காலப்பகுதியினுள் 2 மணித்தியாலங்களுக்கும் 5 மணிமுதல் இரவு 9 மணிவரையான காலப்பகுதியினுள் ஒரு மணித்தியாலமும் மின்வெட்டினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

## செல்லுபடிக்...

தெரிவித்துள்ளது.

அவ்வாறே, எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி முதல் 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செலுபடியாகும் காலம் மேலும் 3 மாதங்களால் நீடிக்கப்படவுள்ளதாக அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்கான மூலப்பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## முல்லையில்...

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு, மாங்குளத்தில் உள்ள புதிய கொலனியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

மாணவி மரத்தில் ஏறிக் கொய்யாப்பழம் பறிக்க முயன்றபோது, அருகில் இருந்த கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதில் முல்லைத்தீவு மாங்குளம் மகா வித்தியாலத்தில் தரம் 9இல் கல்விகற்ற தயாபரன் தர்மினி என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

மாணவியின் உடல் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மாங்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம)

## மாணவி...

கொல்லப்பட்டுள்ளார்.

பதுளை மாவட்டம், ஹாலிஎல உடுவர தோட்டத்தின் கீழ்பகுதியில் வசிக்கும் தர்மராஜ் லிபியா என்ற 18 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் ஹாலிஎல தமிழ் மகா வித்தியாலய மாணவியாவார்.

பாடசாலை முடிந்து பேருந்தில் வீடு திரும்பிய மாணவி, உடுவரையில் இறங்கினார்.

வீடு நோக்கி வலஸ்பெத்த வீதியில் நடந்து செல்லும்போது, இளைஞன் ஒருவர் அவரது தலையில் பலமுறை கோடாரியால் அடித்து கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இளைஞன் கடந்த பல மாதங்களாக மாணவிக்கு காதல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். தன்னை காதலிக்கும்படி வற்புறுத்தி வந்தார். எனினும், மாணவி அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

கடந்த வருடம் மாணவியின் தாயாரை சந்திக்க வந்துள்ளார். அப்போது, மாணவியின் அண்ணன் மீது கோடாரியால் தாக்குதல் நடத்தியது தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## வீட்டில்...

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்த மாணவியை, பொலிஸார் கோப்பாய் பிரதேச செயலக நன்னடத்தை பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

மதுபோதையில் வரும் தந்தை, தாயுடன் சண்டை பிடிப்பதாகவும் இருவராலும் தான் வீட்டில் நிம்மதியாக இருக்க முடியவில்லை என தெரிவித்து குறித்த மாணவி பாடசாலை சீருடையுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை தஞ்சம் அடைந்துள்ளார்.

ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த 7ஆம் தரத்தில் கல்வி கற்கும் 12 வயதுடைய குறித்த மாணவி, தினமும் தந்தை மதுபோதையில் வந்து தாயாருடன் சண்டை பிடிப்பதாகவும் இதனால் தன்னுடன் ஒவ்வொருநாளும் வாக்குவாதத்திலும் சண்டையிலும் ஈடுபடுவதாகவும் தெரிவித்தார்.

குறித்த மாணவி வீட்டின் மூத்த பிள்ளை எனவும் இவரை விட இரண்டு பிள்ளைகள் இருப்பதாகவும் பொலிஸார் மாணவி தொடர்பில் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

அதேவேளை தம்மிடம் தஞ்சமடைந்த மாணவியை பொலிஸார் கோப்பாய் பிரதேச செயலக நன்னடத்தை பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-33,104)

## மின்சாரம்...

இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த சு.சுதர்சன் என்ற 29 வயது இளைஞரே உயிரிழந்தவராவார்.

சீமெந்து கல் அரியும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மின்சார வயரில் இருந்து ஏற்பட்ட மின் ஒழுக்கால் கல் அரியும் இயந்திரத்துக்கு மின் பாய்ந்துள்ளது என்றும் இயந்திரத்தை இயக்கிய இளைஞர் மின்தாக்கத்துக்கு இலக்கானார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-18,33,104)

## விபரீத...

இதில் கலட்டி மஞ்சந்தோட்டத்தைச் சேர்ந்த அழகேஸ்வரன் ராஜ்மேனன் வயது 22 என்ற இளைஞரே உயிரிழந்தவர் ஆவார்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உடல் கூற்று சோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது . விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)

## பொருளாதார...

ளார்.

எனவே அது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் அரசாங்கத்தின் பின்வரிசை உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் பசில் இவ்வாறு தெரிவித்தார். (ம)

## அரசி...

இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் ஜுலி சங் இற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றுள்ளார்.

இதன்போது, அனைத்து இலங்கையர்களுக்கும் அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் மற்றும் நீதி என்பனவற்றின் அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டதாக அமெரிக்க தூதுவர் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஜனநாயகம், நல்லாட்சி, மனித உரிமைகள் மற்றும் இலங்கையின் பல்வேறு சமூகங்களை உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி என்பன குறித்து மேலும் பல கலந்துரையாடல்களை எதிர்பார்ப்பதாகவும் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார். (ம)

## சுதந்திரக்...

திபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள 15 விடயங்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் சர்வகட்சி மாநாட்டை கூட்டவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ச, அமைச்சர்கள் பசில் ராஜபக்ச, தினேஷ் குணவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவண்ண, பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஜகத் புஷ்பகுமார, சாந்த பண்டார, சாரதீ துஷ்மந்த, ஷான் விஜயலால் டி சில்வா, சாமர சம்பத் மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ம)


மெகா பவர்
திகதி 08/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1048
L 23 01 38 39 46

மஹஜன சம்பத
திகதி 2022/03/08
சீட்டிழுப்பு இலக்கம் 4700
R 0 9 7 4 4 2

தன நிதானய
திகதி - 2022.03.08
சீட்டிழுப்பு இலக்கம் - 730
X 11 24 38 59

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1503
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.03.08
ரூ. 6,299,860/-
04 17 69 77 Q

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.08
சீட்டிழுப்பு இல: 3838
வர்ணம்: இளநீலம்
ரூ. 5,876,980/-
12 20 60 70 H

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1677
நிறம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 08.03.2022
தினம் செவ்வாய்
H 14 30 39 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 51,408,276/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 144
சீட்டிழுப்பு திகதி 08.03.2022
செவ்வாய்க்கிழமை
12 21 24
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,095,040/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,441,599/-
திகதி 08.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3389
வர்ணம் சிவப்பு
05 20 35 37
சிம்மம்
3257 398
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 12,806,540/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 38 22 35 45 60
சீட்டிழுப்பு வாரம் 853
2022.03.08 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 219,912,331/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை மெதடிஸ் தேசிய பாடசாலையாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மெதடிஸ் உயர்தர பெண்கள் பாடசாலை தேசிய பாடசாலையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.


சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் 08 பெண்கள் பாடசாலைகளும் 02 கலவன் பாடசாலைகளும் தேசிய பாடசாலை அமைப்பில் இணைக்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது.

இதில் பெலிஅத்த புவக் தண்டாவ தம்மபால மகளிர் பாடசாலை, பிலியஷோதரா மகளிர் பாடசாலை, தொம்பே தேவி பெண்கள் பாடசாலை, கல்முனை மஹா முத் பெண்கள் பாடசாலை, கெக்கிராவ வித்யார்த்த மகா வித்தியாலயம், கேகாலை சுவர்ண ஜயந்தி மகா வித்தியாலயம், ஹட்டன் கெப்ரியல் பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்ட் உயர்தர பெண்கள் பாடசாலை, தங்கொட்டுவ பௌத்த மகளிர் பாடசாலை மற்றும் வலஹந்துவ ஜனாதிபதி பெண்கள் பாடசாலை ஆகியன இவ்வாறு தேசிய பாடசாலைக்அமைப்பில் இணைக்கப்பட்டன. (ம)

## மரண அறிவித்தல்

### நடராஜா கனகசபை

(ஓய்வூதியர்)



தோற்றம் 1931.10.18 மறைவு 2022.03.07

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கனகசபை கடந்த (07.03.2022) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற லோகராணியின் அன்புக் கணவரும் கனகரத்தினம், இராசாத்தியம்மா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயமதி (குமுதா - Germany), விஜயமதி, 'விஜயதனுசன் (Germany) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரராஜா (Germany), அமரர் ரவீந்திரன், பிரியந்தினி (Germany) ஆகியோரின் அன்பு மாமனாரும் வினுசியன், மிதுஷன், ஸதுர்சிமா, ஜிதுஷா, அதிஷன், ஆருஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.03.2022) புதன்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலடி,
ஆனைக்கோட்டை.

(10552)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 08 . 1938



இறப்பு 08 . 03 . 2022

### திருமதி சின்னையா அன்னம்

(ஓய்வுநிலை ஆசிரியை)

யாழ்.வடமராட்சி, கோயிற்கடவை, துன்னாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா அன்னம் (ஓய்வுநிலை ஆசிரியை) அவர்கள் நேற்று (08.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற மருதர் சின்னையாவின் அன்பு மனைவியும் சின்னையா சித்திரூபாவின் (ஆசிரியை) பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற நடேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற மகேசு தங்கரத்தினம், செல்வராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), கந்தசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பகீரதன் (ஆசிரியர்), பங்கயன் (ஆசிரியர்), வனஜா இராசநிதி (ஆசிரியை), நிக்சா சிவலோகநாதன் ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும் சஞ்சீவன் சர்மினியின் (ஆசிரியை) பாசமிகு மாமியாரும் மற்றும் சிவபாக்கியம், மகேசு (ஓய்வுநிலை அதிபர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.03.2022) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 11 மணியளவில் கரவெட்டி வேருண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோயிற்கடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

(C-3924)

தகவல்:
குடும்பத்தினர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10534)

076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (10551)

**தென்னங்காணி விற்பனைக்குண்டு**

எழுதுமட்டுவாள் A9 வீதியிலிருந்து 1½ km தூரத்தில்
15 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.
5 ஏக்கர்களாக பிரித்தும் கொடுக்கப்படும். (10541)

077 653 1980, 074 037 1960

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- ஏ9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 8 கி.மீ தூரம்
- lanka ashok leyland வாகன விற்பனை நிலையத்திற்கு அருகாமை
- 18 அடி பாதையுடன் இயற்கையான சூழல்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம். (10472)

குரு - 077 623 4204, 077 288 0152
076 658 3621, 077 911 6983

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-3862)

எமது கிளைகள்
கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-3862)

0768226240 DHL

**கணனி பற்றிய அறிவிருந்தும் தரமான கணனி சான்றிதழ் இல்லையா?**

**இலவச தகுதிகாண் பரீட்சையில் பங்குபெறுங்கள்**

- பரீட்சையின் பின் NVQ Levelற்கு சமமான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- தேவையேற்படின் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு நடைபெறும்.
- பாடசாலை, தொழில்நுட்ப கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், வேலை தேடுவோர், வெளிநாடு செல்ல உள்ளோர், அரச தனியார் ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம்.
- வடக்கு கிழக்கு அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை நடைபெறும்.

பெயர் விபரங்களை SMS செய்யுங்கள்



(C-3918)

ECBC

இல.56, புகையிரத நிலைய வீதி,
வவுனியா. 077 758 5969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.